**தலைப்பு 278 - இரத்தினபுரி மாவட்ட செயலகம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று,அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 27 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இரத்தினபுரி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால்துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. மேலும்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கம் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பின்வரும் விடயங்கள தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டு நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக குறிப்பிட முடியாதிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடொன்று இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 21 திகதிய இலக்கம் 267/2018 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம் நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பபட்ட எண்ணிக்கை திறைசேரி இறுதி நிதிக் கூற்றுடன் இணங்க வேண்டிய போதும், வைப்பு வரவு திறைசேரி இறுதி நிதிக் கூற்று பிரகாரம் ரூபா 483,412,888ஆன போதும் அது ரூபா 156,110,805குறைத்து ரூபா 327,302,083எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 திகதிய இல 267/2018 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட வேண்டும். | குறித்த பணப் பெறுமதியை அட்டவணைப்படுத்துகையில் உட்படுத்தப்பட வேண்டிய இடத்தை மாற்றிக் குறிப்பிட்டதனால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) | மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட அவதானிப்பு காரணமாக 2018 டிசம்பர் 31 திகதி கட்டுநிதி கணக்கு மீதி ரூபா 3,724,099,617ஆக இருக்க வேண்டிய போதும், அது ரூபா 3,567,988,812எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | மேல் குறிப்பிடப்பட்டவாறு | குறித்த பணப் பெறுமதியை அட்டவணைப்படுத்துகையில் உட்படுத்தப்பட வேண்டிய இடத்தை மாற்றிக் குறிப்பிட்டதனால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. |

1.6.2 **நிதி நிலைமைக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம் நிதி நிலைமை தொடர்பான கூற்றின் எண்ணிக்கை திறைசேரி இறுதி நிதிக் கூற்றில்குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையுடன் இணங்க வேண்டிய போதும், திறைசேரி இறுதி நிதிக் கூற்று பிரகாரம் வைப்புக் கணக்கு மீதி ரூபா 327,302,083 ஆன போதும் அது ரூபா 156,110,780 இனால்அதிகரித்து ரூபா 483,412,863 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | பொது நிதி சுற்றறிக்கையின் 3.1 பந்தி பிரகாரம் செயற்பட வேண்டும். | குறித்த பணப் பெறுமதியை அட்டவணைப்படுத்துகையில் உட்படுத்தப்பட வேண்டிய இடத்தை மாற்றிக் குறிப்பிட்டதனால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. |
| (ஆ) | மேலே (அ) இல் குறிப்பிடப்பட்ட அவதானிப்பு காரணமாக தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 113,093,943ஆக இருக்க வேண்டிய போதும், அது ரூபா 269,204,723 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | மேல் குறிப்பிடப்பட்டவாறு | முன்னே இந்நிலைமையினை திறைசேரி ஆலோசணைகளின் படி தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | 2018 டிசம்பர் 31 திகதிக்கு நிதி நிலைமை தொடர்பான கூற்றுடன் ஒப்பிட்டு முன்வைக்கப்பட்டிருந்த 2017 டிசம்பர் 31 திகதி நிதிசாரா சொத்துகள் மீதி மற்றும் 2018 நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ – 6 படிவத்தில் 2018 ஜனவரி 01 திகதிக்கு அம் மீதிகளிடையில் ரூபா 1,213,199,114 ஆன முரண் நிலவியது. | அலுவலக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளுடன் ஒப்பிட்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | கணக்காய்வின் போது காட்டப்பட்ட விடயங்கள் சரியானவை. |
| (ஈ) | நிதிசாரா சொத்துகள் மீதி தொடர்பாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ள ஒற்றைத் தகவல்களின் பொழிப்பு மற்றும் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ – 6 படிவத்தில் பிரகாரம் மீதிகளிற்கிடையில் 12 சந்தர்ப்பங்களில் ரூபா 2,865,573,937 ஆன முரண் | அலுவலக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளுடன் ஒப்பிட்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | ஒன்றிணைந்த நிதிக் கூற்றினை தயாரிக்கும் போது 2017 டிசம்பர் 31 திகதி நிலவிய மீதி குறிப்பிடப்பட்டிருந்த போதும், பிரதேச செயலகத்தினால் மீள் மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்ட பெறுமானங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | நிலவின. | | கணக்காய்விற்கு வழங்கப்பட்டிருந்தமை. |
| (உ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருந்த பொது வைப்புக் கணக்கு இணக்கக் கூற்றின் பிரகார மீதிகளை மற்றும் பிரதேச செயலகங்களினால் பெறப்பட்ட தகவல்களின் பிரகார மீதிகளை இணக்கம் செய்கையில் ரூபா 373,237 ஆன முரண் அவதானிக்கப்பட்டன. | அலுவலக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளுடன் ஒப்பிட்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டியமை | இம் முரனுக்கான காரணம் செலவு விடயம் இலக்கம் 6000-18-0-12 மற்றும் 6000-13-0-27 கொண்ட பொது வைப்புக் கணக்கு, இணக்கக் கூற்றின் பிரகாரம் காட்டப்படாமை. |
| (ஊ) | இலக்கம் 258/2017 மற்றும் 2017 ஒக்டோபர் 16 திகதிய பொது நிதி சுற்றறிக்கையின் 2.7 பந்தி பிரகாரம் வைப்பு வகை 6003 இன் மீதி தீர்த்து முடிவிக்கப்பட வேண்டிய போதும், ரூபா 108,030 ஆன பாதக மீதி தொடர்ந்து 2018 டிசம்பர் 31 வரையும் நிலவியது. | இலக்கம் 258/2017 மற்றும் 2017 ஒக்டோபர் 16 திகதிய பொது நிதி சுற்றறிக்கையின் 2.7 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இப் பாதக மீதியை 2018 டிசம்பர் 31 திகதி தீர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை மேற்கொள்ள திறைசேரி அறிவுறுத்தப்பபட்டிருக்கின்றமை. |
| (எ) | முற்பணக் கணக்கு மற்றும் ஒற்றை மீதி வகைப்படுத்தலின் பிரகாரம் விழா முற்பணம், ஆதனக் கடன், மோடார் வாகனக் கடன், இடர்க் கடன், மற்றும் ஏனைய கடன்களின் கீழ் முறையே ரூபா 136,880 ரூபா 796,776 ரூபா 248,880ரூபா 16,101,096 மற்றும் ரூபா 1,694,774 ஆகிய முரண்கள் நிலவின. | அலுவலக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளுடன் ஒப்பிட்டு நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். | பந்தியை ஏற்றுக்கொண்டுள்ளதுடன் முரண்கள் தொடர்பான தெளிவுபடுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 1.6.3 **நிதிப் பாய்சல் கூற்று**

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செயற்பாட்டு நடவடிக்கைகளுடன் கூடிய நிதிப் பாய்ச்சலின் வருமானம் அல்லாத பெறுவனவாக ரூபா 6,669,526,436 குறிப்பிடப்பட்ட போதும், கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 6,588,627,790 ஆக இருந்தது. | 2018 நவம்பர் 21 திகதிய இல 267/2018 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை ஆலோசணை பிரகாரம் நிதிக் கூற்று தயாரிக்கப்பட | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பெறுமதி ரூபா 6,588,627,790 இற்கு முற்பண கணக்குகளின் பெறுவனவுப் பெறுமதியான ரூபா 80,898,646 இனைக் கூட்டி மொத்த பெறுவனவு ரூபா 6,669,526,436 குறிப்பிடப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டும். | |
| (ஆ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட மாதாந்த கணக்கு பொழிப்பின் படி ரூபா 453,036,874 ஆன வைப்புக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும், நிதிப் பாய்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்ட நிதிப் பாய்சலில் அப் பெறுமதி குறிப்பிடப்படவில்லை. | மேல் குறிப்பிடப்பட்டவாறு | ரூபா 453,036,874 ஆன வைப்புக் கொடுப்பனவு நிதி பாய்சல் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய நிதி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட நிதி பாய்சலில் வைப்புக் கொடுப்பனவு மற்றும் ஏனைய பொறுப்பு மாற்றலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 4,203,597,322 ஆன தொகையிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட மாதாந்த கணக்கு பொழிப்பின் படி முற்பண பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகள் முறையே ரூபா 80,898,646 ஆக மற்றும் ரூபா 82,968,771 ஆக இருந்த போதும், அக் குறிப்பு முதலீட்டு நடவடிக்கைகளினால் உருவாக்கப்பட்ட நிதிப் பாய்ச்சலில் மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிற்காக செலவிடப்பட்ட நிதிப் பாய்ச்சலில் குறிப்பிடப்படவில்லை. | மேல் குறிப்பிடப்பட்டவாறு | முற்பண பெறுவனவுப் பெறுமதியான ரூபா 80,898,646 ஆன தொகை செயற்பாட்டு நடவடிக்கை பெறுவனவின் கீழ் வருமானமல்லாத பெறுவனவாகவும், முற்பண கொடுப்பனவு ரூபா 82,968,711 ஆன பெறுமதி நிதி நடவடிக்கைகளின் கீழ் உள்ள பணச் செலவீடு கொடுப்பனவு வைப்பு மற்றும் ஏனைய பொறுப்புக்களின் மாற்றத்தின் கிழ் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆளணி சம்பளம், செயற்பாட்டு செலவு, நிவாரண உதவி, மாற்றல் மற்றும் பௌதீக சொத்து நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றல் என்பவற்றிற்காக கூட்டுத் தொகை ரூபா 6,133,511,105 செலவிடப்பட்ட போதும், அவை நிதிப் பாய்ச்சல் கூற்றில் கூட்டுத் தொகை ரூபா 2,465,919,428 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2018 நவம்பர் 21 திகதிய இலக்கம் 267/2018 கொண்ட பொது நிதி சுற்றறிக்கை ஆலோசணை பிரகாரம் நிதிக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட நிதிப் பாய்ச்சலான ரூபா 723,913,817 மற்றும் பௌதீக சொத்து நிர்மாணத்திற்காக ரூபா 1,742,005,611 மற்றும் நிதி செயற்பாடுகளை உள்ளடக்கிய ரூபா 4,203,597,322 ஆன கூட்டுத் தொகையிலிருந்து பிரதான பதிவேட்டு செலவுப் பெறுமதியான 536,005,645 இனை குறைப்பதனூடாக |
| (உ) | மாவட்ட செயலகத்தினால் மீளாய்வாண்டில் நிதி செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்காத போதும் அதன் கீழ் ரூபா 4,203,597,322 குறிப்பிடப்பட்டிருந்தது. | மேல் குறிப்பிடப்பட்டவாறு | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்ட ரூபா 4,203,597,322 ஆன பணம் நிதி செயற்பாடுகளினாலான நிதிப் பாய்ச்சலில் காட்டப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2018 ஆண்டு நிதிக் கூற்றுகளின் ஏசீஏ–6 படிவத்தில் குறிப்பிட்டிருந்த ரூபா 764,841 ஆன சொத்து விற்பனை, நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளுடனான நிதிப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்படவில்லை. | சொத்து விற்பனை நிதிப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடாக காட்டப்பட வேண்டும். | ஏசீஏ–6 படிவத்தில் குறிப்பிடுள்ள ரூபா 764,841 ஆன சொத்து விற்பனையினால் கிடைத்த பணம் ஏனைய பெறுவனவுகளில் உள்ளடங்குவதனால் நிதி செயற்பாடுகளுடனான நிதிப் பாய்ச்சலின் கீழ் குறிப்பிடப்படவில்லை. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள்மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

---

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டன.அவதானிப்புகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக் கோவை | | | |
| xix பிரிவின் 5 பந்தி | தாபன விதிக் கோவை xix பிரிவின் 5 பந்தி பிரகாரம் உத்தியோக இல்ல வாடகை கணிப்பிடப்படாததன் காரணமாக 2016 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை கூட்டுத் தொகை ரூபா 542,929 குறைத்து அறவிடப்பட்டிருந்தது | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் | நிலுவை இல்லவாடகை கணிப்பிடப்பட்டு அறவிட நடவடிக்கை எடுத்தல் |
| xix பிரிவின் 4.4 பந்தி | உத்தியோகபூர்வ இல்லக் குழு அறிக்கைப் புத்தகம் நாளாதுவரையாக்கப்படாமை | தாபன விதிக் கோவை xix பிரிவின் 4.4 பந்தி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | இல்லக் குழு ஏற்படுத்தப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க குறித்துக் கொள்ளப்பட்டமை |

1.6.5 **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி பிரதேச செயலக அதிகார எல்லையில் வெள்ள அனர்தத்தால் பாதிக்கப்பட்ட பொருட்களுக்கு இழப்பீடு வழங்கும் போது அதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் மற்றும் பிரதேச செயலாளரின் விதிந்துரைகளின் பேரில் குறித்த பயன் பெறுனர்கள் கோரிய உச்ச தொகையையும் விஞ்சி 49 சந்தர்ப்பங்களில் ரூபா 2,088,965 மேலதிக இழப்பீடாக செலுத்தப்பட்டிருதது | நிதிப் பிரமாணம் 104, 109 மற்றும் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சுற்றுநிருபம் பிரகாரம் கொடுப்பனவு செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் அவ் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளல் |
| (ஆ) | 2017 ஆண்டு இரத்தினபுரி பிரதேச செயலக அதிகார எல்லையில் வெள்ள அனர்தத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு இழப்பீடு வழங்கும் போது 2017 ஜுன் 25 திகதிய என்டிஆர்எஸ்சீ/01/04/01/2017 கொண்ட சுற்றுநிருப ஆலோசனைகளக்கு மாற்றமாக 9 பிரிவுகளில் 31 வீடுகள் தொடர்பாக ரூபா 1,187,711 மேலதிகமாக செலுத்தப்பட்டிருதது | நிதிப் பிரமாணம் 104, 109 மற்றும் 156பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சுற்றுநிருபம் பிரகாரம் கொடுப்பனவு செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது எனவும் அவ் ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ளல் |
| (இ) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் 03 திணைக்களங்களினால் 06 பிரதேச செயலகங்களுக்கு பல்வேறு கருமங்களை மேற்கொள்ள ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ் ஒதுக்கீடுகளுக்கு அமைய 18 வேலைகளில் 20 செலவு விடயங்களை மேற்கொள்வதற்காக கூட்டுத் தொகை ரூபா 25,817,599 இற்கான ஒப்பந்தங்களிற்கு உடன்பட்டிருந்தனர். அவ்வாறு உடன்பட்ட ஒப்பந்தங்கள் தொடர்பாக அளவையிடலின் போது ரூபா 361,267 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 15,278 அறவிடப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணம் 104, 109 மற்றும் 156 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | இது தொடர்பாக வேரொறு அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட தொழில்நுட்ப அலுவலர் ஒருவர் மூலம் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு மேலதிக பணம் செலுத்தப்பட்டிருந்தால்குறித்த பொறுப்புதார அலுவலர்களிற்கு எதிராக உரிய நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மீதிரூபா 345,989 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. | | |
| (ஈ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினால் 03 பிரதேச செயலகங்களிற்கு 04 ஒப்பந்த வேலைகளிற்காக ரூபா 2,019,865 ஒதுக்கீடு ஏற்படுத்தப்பட்டிருந்தது. அவ்வேலைகளிற்கு எதிராக தனிப்பட்ட வீடுகள் தொடர்பான கொன்கிரீட் இடலிற்காக 14,046 கியுப் கொன்கிரீட் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 193,307 செலுத்தப்பட்டிருந்தது. | பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையை குறித்த தரப்பினரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு கூடுதலாக பணம் செலுத்தப்பட்டிருந்தால் குறித்த பொருப்புதார அலுவலரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்தல். |
| (உ) | நீர்பாசன மற்றும் நீர்வள முகாமை அமைச்சினால் இபுல்பே பிரதேச செயலக அதிகார எல்லையில் தெஹிஅத்தவெல கால்வாய் பக்க மதில் நிர்மாணத்திற்காக ரூபா 784,000 ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக் கருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக பிரதேசத்தின் மரண உதவி மற்றும் நலனுதவி சங்கம் ஒன்றுடன் ரூபா 784,000 ஆன ஒப்பந்தம் ஒன்றிற்கு உடன்பட்டிருந்தது. 2018 ஜுலை 23 திகதி இக்கருத்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு குறித்த சங்கத்திற்கு ரூபா 705,575 (10 சதவீத நிருத்தி வைத்தற் பணம் கழிக்கப்பட்ட பின்னர்) செலுத்தப்பட்டிருந்த போதும், 2018 டிசம்பர் 11 திகதி பௌதீக ரீதியாக பரீட்சிக்கப்பட்ட போது நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்திட்டத்திற்காக கொடுப்பனவு செய்கையில் நிதிப் பிரமாண ஏற்பாடுகளிற்கு அமைய மற்றும் அதற்கு முரண்படலிற்காக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல வேண்டும். | அவதானிப்புடன் உடன்படுவதாகவும் இது தொடர்பாக பரிசீலனை மேற்கொண்டு முன் நடவடிக்கை எடுத்தல். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமை

மாவட்ட செயலகத்தின் கட்டுநிதி கோரல் மற்றும் கிடைத்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஜனவாரி முதல் மே மாதம் வரையும், நவம்பர் முதல் டிசம்பர் மாதம் வரையும் பிரதேச செயலகம் கோரிய கட்டுநிதியை விஞ்சி ரூபா 39,853,382 முதல் ரூபா 785,430,213 வரை வீச்சலவிலான கட்டுநிதி கிடைத்திருந்தது. ஜுன் முதல் ஒக்டோபர் மாதம் வரை கோரிய கட்டுநிதியை விடவும் ரூபா 212,222,000 முதல் ரூபா 525,659,000 வரை வீச்சலவில் குறைவாக கட்டுநிதி கிடைத்திருந்தது. | கட்டுநிதி தேவையினை சரியாக மதிப்பிட்டு திறைசேரிக் கட்டுநிதி கோர வேண்டியமை. | மீளாய்வாண்டின் ஆரம்ப காலப் பகுதியில் ஒரு சில பட்டியல்களை தீர்ப்பதற்காக (2017) குறித்த அமைச்சினால் நேரடியாக தலையிட்டு திறைசேரியிலிருந்து முற்பணம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் கட்டுநிதி கோருவதற்கும் முன்னர் முற்பணம் கிடைத்தமை, ஆண்டிருதியில் போதிய முற்பணம் கிடைக்காமையும் அதற்குக் காரணமாக இருந்தது. |

### 2.2 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|
| 16 பிரதேச செயலகங்களிற்கு ஏனைய 22 அமைச்சுக்கள்/திணைக்களங்களினால் 32 தேவைப்பாடுகளிற்காக வழங்கப்பட்ட ரூபா 1,846 மில்லியன் ஒதுக்கீடுகளிலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 1,062 மில்லியன் ஒதுக்கீடு சேமிப்பாக இருந்தது. அச் சேமிப்பு மொத்த ஒதுக்கீட்டின் 11 சதவீதம் முதல் 100 சதவீத வீச்சலவில் நிலவின. | வழங்கப்பட்டிருந்த ஒதுக்கீடு தொடர்பாக திறைசேரியிலிருந்து கட்டுநிதியை பெற்றுக் கொள்வதற்காக தேவையான திட்டத்தினை சரியாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அவதானத்துடன் இணங்குகிறேன் |

2.3 **நிமித்த உப கட்டுநிதி வழங்கல் மற்றும் தீர்த்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 371 பிரகாரம் பல்வேறு நடவடிக்கைகளுக்காக பெறப்பட்ட நிமித்த உப கட்டுநிதியை உரிய நடவடிக்கை முடிவடைந்து 10 தினங்களில் தீர்க்க வேண்டிய போதும், 03 பிரதேச செயலகங்களிற்குரிய 2017 மற்றும் 2018 ஆண்டுகளிற்காக பெறப்பட்ட ரூபா 495,392 பெறுமதியான 46 உப கட்டுநிதிகள் உரிய காலத்தையும் விஞ்சி 01 முதல் 54 தினங்கள் வரையான கால எல்லையின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 371 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | இதன் பின்னர் இவ்வாரான நிலைமைகளை தவிர்க்க நடவடிக்கை எடுத்தல். |

**2.4 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|
| 09 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களிற்குரிய 02 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 39,504,359 ஆன 187 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | திறைசேரி கட்டுநிதி கிடைக்காததன் மீது நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க முடியாமை. |

**2.5 அரச ஊழியர் முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 485(4) மற்றும் 2004 ஒக்டோபர் 11 திகதிய இலக்கம் 118 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றுநிருபம் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் கடன் மீதி 03 | சுற்றுநிருபம் பிரகாரம் கடன் மீதிகள் தீர்க்கப்பட வேண்டும். | கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள உரிய தரப்பினருக்கு அறிவுருத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | மாதங்களிற்குள் தீர்க்கப்பட வேண்டிய போதும், 2018 டிசம்பர் 31 திகதி வரையும் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் கூட்டுத் தொகை ரூபா 158,455 ஆன கடன் மீதிகள் 03 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான காலத்தை விஞ்சியிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் அம்மீதிகளை தீர்த்துக் கொள்ள அலுவலகத்திற்கு முடியாதிருந்தது. | | |
| (ஆ) | ஓய்வு பெற்று 03 முதல் 12 மாதங்கள் வரையான கால எல்லைக்குள் காலம் கடந்திருந்த கூட்டுத் தொகை ரூபா 285,250 ஆன 03 கடன் மீதிகளை மீளாய்வாண்டு இறுதி வரையும் தீர்த்திருக்கவில்லை. | தாபன விதிக்கோவை xxiv பந்தி 4 ஆவது பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓய்வூதிய பணிக் கொடையிலிருந்து கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுத்தல். |
| (இ) | இறுதித் தவணை அறவிடப்பட்டு ஓராண்டை விஞ்சியிருந்த வேலை இடை நிருத்தம் செய்யப்பட்ட 07 நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 989,956 கடன் மீதியை, அக் கடன்காரர்களிடமிருந்து அல்லது பிணைதாரர்களிடமிருந்து அறவிட 2018 டிசம்பர் 31 திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. 05 ஆண்டுகளை விஞ்சிய கூட்டுத் தொகை ரூபா 333,306 ஆன 04 கடன் மீதிகள் அதற்குட்பட்டிருந்தன. | கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்தல். | அறவிடப்பட வேண்டியுள்ள கடன் மீதிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை மேற்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | விதிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வாழ்வெழுச்சி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் 03 சமுதாய அபிவிருத்தி நிகழ்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த 08 பிரதேச செயலகங்களுக்கு கூட்டுத் தொகை ரூபா 343,000 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. திறைசேரியிலிருந்து போதிய முற்பணம் கிடைக்காத காரணத்தால் அதன் வேலைகள் மேற்கொள்ளப்படவில்லை. | முற்பணத் திட்டத்தை முறையாக தயாரித்து அதன் படி திறைசேரியிலிருந்து கட்டுநிதி கோர வேண்டும். | ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்த போதும் போதிய முற்பணம் கிடைக்காத காரணத்தால் இவ் வேலைகளை மேற்கொள்ள முடியாமை. |
| (ஆ) | ஹடன்பொல கிராமத்தில் உள்ள அனைத்து தொழிலாளர்களையும் தொழில் நுட்ப அபிவிருத்தி சபையின் கீழ் பதிவதற்கான கருத்திட்டத்திற்கு மீன்பிடி, நீர்வள அபிவிருத்தி மற்றும் கிராமிய பொருளாதாரம் தொடர்பான அமைச்சினால் இம்புல்பே பிரதேச செயலகத்திற்கு ரூபா 121,856 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. 2019 மே 31 திகதி வரையும் அத் தொழிலாளர்கள் பதியப்பட்டிருக்கவிலலை. | தொழில்நுட்ப அபிவிருத்தி சபையுடன் நெருங்கிய தொடர்புடன் பிரதான நோக்கை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல். | கிராமக் கைத்தொழிலிற்கான மேற்பார்வை தொழில்நுட்ப அபிவிருத்தி சபையினால் இக்கால எல்லைக்குள் செய்யாதன் காரணமாக பதிவு மேற்கொள்ளப்படவில்லை |
| (இ) | 2018 ஆண்டினுள் கிரியல்ல பிரதேச செயலக உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிப்பதற்காக ரூபா 5,000,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதி வரையும் அது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீட்டினைப் பெற்று கருத்திட்டத்தை துரிதமாக பூர்தி செய்ய நடவடிக்கை எடுத்தல். | மதிப்பீடு அங்கிகரிக்கப்பட்ட போதும் ஒதுக்கீடு கிடைக்காதன் மீது கருத்திட்டம் நடைமுறையாகவில்லை. |
| (ஈ) | இரத்தினபுரி பிரதேச செயலக பிரிவிற்குரிய பாம்காடின் கொழுவாவிள பாதை புனரமைப்பிற்குரிய வேலை நிர்மாணம் 2018 ஜனவரி 14 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அதற்குரிய மதிப்பீட்டின் 10 வேலை | உரிய தரப்பினருக்கு தகவல்களை வழங்கி ஒதுக்கீட்டினை பெற்று பூர்த்தி செய்யப்படாத பகுதியினை | கிடைத்துள்ள ஒதுக்கீட்டு எல்லையினுள் அத்தியவஷ்ய வேலைப் பகுதியை மாத்திரம் ஒப்பந்தக்காரர் மூலம் நிறைவேற்றப்பட்டது. |

| | | |
|---|---|---|
| விடயங்களிற்காக ரூபா 1,336,403 ஆன செலவிற்காக ஒதுக்கீடு கிடைக்காதன் காரணமாக 2019 ஜனவரி 23 திகதி வரை அவ் வேலை பகுதி பூர்த்தி செய்யப்படவில்லை. | துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல். | |

**3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை பெற்றுக் கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் 02 மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக செயல் நடவடிக்கை திட்ட பரிசோதனையின் போது 48 செயல் நடவடிக்கைகளிற்குரிய எதிர்பார்த்த இலக்கு மற்றும் உண்மை நிலைமைக்கிடையில் 6 சதவீதம் முதல் 69 சதவீதம் வீச்சலவு வரையான குறைந்த முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருந்தது. 17 செயல் நடவடிக்கைகள் தொடர்பாக காணப்பட்ட இலக்கினை அடைந்திருக்கவில்லை. | செயல் நடவடிக்கை திட்டத்திலுள்ள எதிர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுத்தல். | எதிர்பார்த்த இலக்கை இனங்காணுகையில் நிலவுகின்ற குறைபாட்டு நிலையினை தவிர்த்துக் கொள்ள இதன் பின்னர் அலுவலர்களை பயிற்றுவித்தலிற்கு நடவடிக்கை எடுத்தல். |
| (ஆ) | 2015 ஜுன் 15 திகதிய இலக்கம் 2008/04 கொண்ட காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கை பிரபாரம் 2018 டிசம்பர் 31 திகதி அரச காணிகளிற்காக அதிகாரப் பத்திரம்/ கொடுப்பனவுப் பத்திரம் வழங்கையில், 08 பிரதேச செயலகங்களில் நடத்தப்படும் காணி செயலகங்களின் எண்ணிக்கை 01 முதல் 08 வரையான குறைந்த அளவு வீச்சளவிலானது. 02 பிரதேச செயலகங்களில் எவ்வித காணி செயலகங்களும் நடாத்தப்படாததுடன் 05 பிரதேச செயலகங்களிற்குரிய அனுமதியற்ற காணி ஒழுங்கமைக்கவுள்ள காணி துண்டுகளின் எண்ணிக்கையில் ஒழுங்கமைப்பதற்காக | அனுமதியற்ற காணி ஒழுங்கமைக்கும் செயற்பாடுகளை துரிதமாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இரத்தினபுரி மாவட்டத்தில் மக்கள் வதிவிட காணிகள் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதனால் காணி ஒழுங்கமைக்க முடியாமை. |

இனங்காணப்பட்ட அளவு 0 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை வீச்சளவான குறை மட்டத்தில் நிலவின. அவ்வாறே 02 பிரதேச செயலகங்களில் அனுமதியற்ற காணி ஒழுங்கமைப்பிற்கான காணி துண்டுகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை குறிப்பாக இனங்காணப்படாமை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் அனுமதியற்ற காணி ஒழுங்கமைக்கும் செயற்பாடு மந்த கதியில் நிலவியது.

## 3.3 கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கலகம லதுயாய பாதை அபிவிருத்திக்காக உள்நாட்டலுவல்கள அமைச்சினால் ரூபா 50,653,814 ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது. அவ் ஒப்பந்த நிர்மாணப் பணிகள் 37 நாட்களில் பூர்த்தி செய்யப்பட வேண்டும் எனுமடிப்படையில் 2016 டிசம்பர் 14 திகதி மேல் மாகாண பாதை அபிவிருத்தி அதிபார சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டிருந்தது. 2017 டிசம்பர் மாதமளவில் வேளையின் நிர்மானப் பணிகள் கைவிடப்பட்டிருந்தது. அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 (அ) வழிகாட்டி பிரகாரம் மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையின் 5 சதவீதத்திற்குக் குறையாதஅதாவது ரூபா 2,532,691 ஆன செயலாற்றுகை காப்பொன்று பெறப்படாமை, அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8.11.4 வழிகாட்டி பிரகாரம் புறக்கணிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர் பட்டியலில் ஒப்பந்தக்காரரின் பெயரை உட்படுத்த நடவடிக்கை எடுக்காமை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்து வேறு நிர்வனம்/ஒப்பந்தக்காரர் மூலம் நடவடிக்கையை செய்து கொள்ள அலுவலகம் மூலம் நடவடிக்கை எடுக்காமை. | குறித்த ஒப்பந்தக்காரைபுறக் கணிப்பு பட்டியலிற்குட்படுத்த ி அத்தரப்பினருடனா ன புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்காமை மற்றும் அரச பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8(அ) வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | நிர்மாணப் பணிகளை வருட இறுதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதாக மேல் மாகாண பாதை அபிவிருத்தி அதிகார சபை உறுதிப்படுத்திய போதும் அவ்வாறு செய்ய முடியாமலிருந்தமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பாதை பராமரிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் 2018 ஆண்டு ரூபா 322.77 மில்லியன் பெறுமதியான பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 10 முதல் 97 சதவீதம் வரை வீச்சளவாக நிலவியது. அவற்றில் 34 நிர்மாணங்களிற்கான ஒதுக்கீடு கிடைக்காததனால் ஒப்பந்தக்காரர்களினால் நிர்மாணப் பணிகள் நிருத்தப்பட்டு கைவிடப்பட்டிருந்தன. மேலும் 2019 பெபரவரி 06 திகதி அளவில் ஒதுக்கீடு கிடைக்காததனால் ரூபா 25,71 பெறுமதியான 02 கருத்திட்டங்களின் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. இவ்வாறு கைவிடப்பட்ட கருத்திட்டங்களிற்காக இது வரை மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மற்றும் காலம் பயனற்று நிலவின. | உரிய கால எல்லையினுள் கருத்திட்டங்களை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் திட்டத்தை முறையாக தயாரித்து கால எல்லையினுள் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்களிற்காக ஏற்பாடு செய்யப்படாததன் காரணமாக நிர்மாணப் பணிகள் தொடர்ந்தும் நடாத்திச் செல்லுமாறு ஒப்பந்தக்காரர்களுக்கு ஆலோசனை வழங்க முடியாமை. |

## 3.4 கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 02 மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களிற்கு 39 கருத்திட்டங்களை மேற்கொள்ள ரூபா 429.82 மில்லியன் ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அக் கருத்திட்டங்களை மேற்கொள்வதன் தாமதம் காரணமாக அதற்காக வழங்கப்பட்ட ஒதுக்கீட்டில் ரூபா 329.83 மில்லியன் அல்லது 76.7 சதவீத ஒதுக்கீடு மீதியாக இருந்தது. | உரிய கால எல்லையினுள் கருத்திட்டங்களை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் திட்டத்தை முறையாக தயாரித்து கால எல்லையினுள் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல். | கணக்காய்வு அவதானங்களுடன் இணங்குவதுடன் அவ்விடயம் பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாதல். |
| (ஆ) | 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளத்தினால் மற்றும் மண்சரிவுகளினால் இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 16991 ஆனது. அதற்காக ரூபா 1,075,757,044 இழப்பீடு வழங்கப்பட இருந்தன. 2018டிசம்பர் 31 திகதியன்று மேலும் செலுத்தப்பட வேண்டிய இழப்பீடு ரூபா 327,713,533 ஆக இருந்தது. | திறைசேரி மற்றும் குறித்த அமைச்சுடனான நெருங்கிய தொடர்புகளுடன் குறித்த இழப்பீட்டுத் தொகையை துரிதமாக செலுத்தக் கூடிய வகையில் நடவடிக்கைகளை திட்டமிட வேண்டியமை. | இழப்பீட்டுத் தொகையை பெற்றுக் கொடுக்கும் விடயம் பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாதல். |
| (இ) | 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் | தற்போது | கணக்காய்வு |

| | | |
|---|---|---|
| ஏற்பட்ட வெள்ளத்தினால் மற்றும் மண்சரிவுகளினால் இரத்தினபுரி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களிற்கு மாற்றுக் காணிகளை வழங்க இனங்காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 2213 ஆனது. அவற்றில் பொருத்தமான காணிகள் 882 குடும்பங்களிற்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | சுவீகரிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவையியல் அறிக்கையை துரிதமாக பெற்று மீதியாகவுள்ள குறிப்பிடக் கூடிய எண்ணிக்கையிலான குடும்பங்களுக்கு காணி பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்தல். | அவதானங்களுடன் இணங்குவதுடன் அவ்விடயம் பிரதேச செயலாளரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயமாதல். |

### 3.5 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரத்தினபுரி மாவட்ட செயலக புதிய கட்டிட நிர்மாணம் தொடர்பாக முன்னைய ஆண்டு கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்ட பிரகாரம் அறவிட வேண்டிய தண்ட தாமதக் கட்டணம் ரூபா 12,528,000 ஆனது. 2018 ஜூலை 12 திகதியன்று 17 ஆவது உள்ளக பட்டியலிற்கு கொடுப்பனவு செய்யும் சந்தர்ப்பத்தில் தாமத தினங்கள் தொடர்பாக Contract Data 8.7 பிரகாரம் ஒப்பந்தத் தொகையின் 5 சதவீத உயர்ந்தபட்ச ரூபா 23,266,017 வை அறவிடாது கொடுப்பனவு செய்ததனால் அத்தொகை ஒப்பந்தக்காரருக்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தத்தின் 8.7 பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல். | நிதிப் பிரமானம் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. |
| (ஆ) | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படாமல் இரத்தினபுரி மாவட்ட செயலக புதிய கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த பண்டக அரைக்கு ஒதுக்கப்பட்ட 225 மி.மீ செங்கல் மதிலை உடைத்து அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாக சிமேந்து அச்சுக்கல் மதிலொன்று அவ்விடத்திலேயே நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | முறையாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட பின்னர் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஆரம்ப மதிப்பீடொன்றை தயாரிப்பது ஒப்பந்தக் காரருக்கு கடின செயல் எனவும் 2018 நவம்பர் 22 திகதி மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் ஒப்பந்தக்காரர், மதியுரை நிர்வனம் மற்றும் மாவட்ட செயலக அலுவலர்கள் ஏகமனதாக தீர்மானித்து அந்நிர்மாணத்தை துரிதமாக மேற்கொள்வதற்கும் பின்னர் மதிப்பீட்டை அங்கீகரிக்கவும் தீர்மானித்தல். |

3.6 **சொத்துக்கள் முகாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டில் ரூபா 2.5 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட பெல்மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய 02 சேவைகள் இல்ல நிர்மாணப் பணிகள் 2017 டிசம்பர் 31 திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 2018 ஒக்டோபர் 29 திகதியன்றும் அக்கட்டிடங்கள் விளைவற்றதாக நிலவின. | அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் வினைத்திறனுடன் பயன் படுத்தப்பட வேண்டியமை. | ஒரு சேவைகள் இல்ல அலுவலகம் தற்போது பயன்படுத்தப்படுவதுடன் அடுத்த சேவைகள் இல்ல அலுவலகத்தை பயன்படுத்த நடவடிககை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |
| (ஆ) | மாவட்ட செயலகத்திற்குரிய 02 பொது சேவை இல்லங்கள் மீளாய்வாண்டு இறுதியிலும் விளைவற்றதாக நிலவின. | குறித்த சொத்துக்களை முறையாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | பொது சேவை இல்லங்கள் இரண்டும் பழுதுபார்த்தல் நிலையில் நிலவுகின்றமையால் அவ்வில்லங்கள் இரண்டையும் பழுதுபார்த்து ஒழுங்கமைக்க நடவடிக்கை எடுத்தல். |

3.7 **அரச அலுவலர்கள் பிணை வைத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 880 குறிப்பிடும் ஏற்பாடுகளின் பிரகாரம் 16 மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் பிணை வைக்க வேண்டிய 86 அலுவலர்களினால் குறித்த பிணை பணம் வைப்புச் செய்திருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 881(ii) குறிப்பிடும் ஏற்பாடுகளின் பிரகாரம் தனது கீழ் நிலை அலுவலர்களிடம் உரிய காலத்தினுள் பிணை பெற்றுக் | நிதிப் பிரமாணம் 880 மற்றும் 881(ii) பிரகாரம் பிணை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | இது தொடர்பாக நடவடிககை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

கொள்ள நடவடிக்கை எடுக்காமை.

## 3.8 முகாமைத்துவ குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் உட்படுத்தப்பட்ட பந்திகளினால் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக திருத்தங்கள் மேற்கொள்ளத பந்திகளினுடனான தொடர்பு பின்வருமாறு. | | |

| கணக்காய்வாளர் நாயக அறிக்கையுடனான தொடர்பு | | விடயத்துடனான தொடர்பு | | |
|---|---|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | | | |
| 2008 | 10(இ)(1) | பாதை எழுச்சி வேலைத் திட்டத்தின் கீழ் குருவிட பிரதேச செயலக பிரிவிற்குரிய தோட்டச் சந்தியிலிருந்து வயல் வெலியூடாக உடகட வரையான பாதைக்காக இடப்பட்டிருந்த கொன்கிரீட் படிவத்திற்காக போடப்படாத 09 கொன்கிரீட் கனஅளவிற்கு ரூபா 159,279 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | பரிசோதனை நடவடிக்கைகளை விரைவில் பூர்த்தி செய்து உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் நிர்மாணம் தொடர்பாக நியம அளவிற்கு உரிய வீதப்படி கொடுப்பனவு செய்ய வேண்டியமை. | இது தொடர்பாக பரிசோதனை மேற்கொள்ள குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளமை. |
| 2013 | 1.7(அ)(1) | குருவிட பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தில் காணப்பட்ட பழைய கூரையை மரச் சட்டம் பொருத்தி புதிதாக பழுதுபார்ப்பதற்கு ரூபா241,316 செலுத்தப்பட்ட போதும், | இக் கொடுப்பனவு தொடர்பாக வகைக்கூரக் கூடிய தரப்பனர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். | நிகழ்வுடன் தொடர்பான தொழில் நுட்ப அலுவலர் பிரதேச சபைக்கு இணைக்கப்பட்டுள்ளதால் ஆரம்ப புலனாய்வு அறிக்கை விதிந்துரைகளின் அடிப்படையில் தேவையான நடவடிக்கைகளுக்காக ஆரம்ப புலனாய்வு அறிக்கையின் பிரதியுடன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அதற்காக பழைய கூரையிலிருந்த கீழ்ச்சட்டங்கள் மற்றும் வளைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. | | குற்றப் பத்திரிகை வரைபொன்று சபரகமுவ மாகாண சபை பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| 2015 | 3.12(இ)iv | 2010 ஆண்டுநிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும், 2015 டிசம்பர் வரையும் அவற்றின் பணிகளை பூர்த்தி செய்து நோக்குடன் தொடர்புடைய நடவடிக்கையில் ஈடுபடுத்த முடியாததன் காரணமாக 05 கலாசார மத்திய நிலையங்களிற்காக அக்காலப்பிரிவினுள் செலவு செய்த ரூபா 12,952,497 பயனற்று நிலவியது. | அபிவிருத்தி கருத்திட்டங்கள் வனைத்திறனுடனும் மற்றும் பயனுள்ளதாகவும் மேற்கொள்ள வேண்டியமை. | மீதிப் பணிகளிற்காக மதிப்பீடு தயாரிக்கப்படுகின்றன. |
| (ஆ) | களஉத்தியோகத்தர்களிற்கு சமுகை அடிப்படையில் மோடார் சைக்கிள் வழங்குவகற்கு 06 பிரதேச செயலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோனைகளின் படி மேலும் 02 பிரதேச செயலகங்களின் மூன்று அலுவலர்களினால் கூட்டுத்தொகை ரூபா 428,340 ஆன தவணைப் பணம் நிலுவையாக இருந்ததுடன் அப்பணத்தை அறவிட செயலகங்களினால் முடியாமல் இருந்தது. | | குறித்த அலுவலர்களிடமிருந்து அல்லது அவ் அலுவலர்களை விடுவித்த தரப்பினர்களிடமிருந்து குறித்த பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | தொடர்ந்தும் இவ்விடயம் தொடர்பாக அலுவலரை மற்றும் அவரின் சேவை நிருவனத்தை அறிவூட்டிய போதும் இது வரை பணம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்படாமை. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளல்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் சபையின "நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சி நிரல் 2030" பிரகாரம் பிரதேச செயலகத்திற்குரிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு | குறித்த நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பாக பயனுள்ள அறிவூட்டலிற்காக சுற்றறிக்கை அல்லது | 2019 மே 22 திகதி நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் பிரகாரம் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுத்தல். |

| | |
|---|---|
| அவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக எவ்வித உள்ளக சுற்றறிக்கை வெளியிடல், செயற்பாட்டு திட்டத்தை தயாரித்தல் அல்லது வழிகாட்டலோ செய்யப்பட்டிருக்கவில்லை. இது தொடர்பாக முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கை மூலம் சுட்டிக் காட்டப்பட்ட போதும் அது தொடர்பாக கணக்காய்வு திகதியாகிய 2019 மார்ச் 05 திகதி வரையும் முறையான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழிகாட்டல் பயன்படுத்தப்பட வேண்டிய போதும், நிருவனத்துடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டு செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**5. நல்லாழுகை**

-------------------

**பொது மக்களுக்கான சேவைகளை நிறைவேற்றுதல்**

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோத்தர் கருத்துரை |
|---|---|---|
| பெல்மடுள்ள பிரதேச செயலக தாபனப் பிரிவின் அனுமதிப் பத்திரம் விநியோகிக்கும் கிழையில் மரம் இடம்பெயர்த்தும் அனுமதிப் பத்திரம் விநியோகித்தல், கால்நடைகளை இடம்பெயர்த்தும் அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் மற்றும் மதுவரி அனுமதிப் பத்திரம் விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகள் இலக்கை விஞ்சி 8 சதவீதம் முதல் 117 சதவீதம் வரை நிறைவேற்றியுள்ளமை சமூக மற்றும் சுற்றாடல் சாதகத் தன்மைக்கு பாதகத்தை ஏற்படுத்தக்கூடும் என்பது கணக்காய்வின் கருத்தாகும். | நடவடிக்கைகளை மேற்கொள்கையில் சுற்றாடல் சாதகத் தன்மை தொடர்பாக கருசனை கொள்ள வேண்டும். | இதற்குக் காரணம் வருடாந்தம் ஏற்படுத்தப்பட்ட இலக்குகளில் குறைபாட்டுடனான நிலைமை நிலவுகின்றனவென. |